# சனாதிபதியைத்
## தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டம்



பஃவ்ரல்

# சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டம்

ப.்.வ்ரல்

2019. 10. 31 ஆகஸ்ட்

இல.16, பேர்ட் பிலேஸ், பாமன்கட வீதி,
கொழும்பு 06.

தொலைபேசி -11 2 558 570 /1
தொலைநகல் - 011 2 558 572
மின்னஞ்சல் - paffrel@sltnet.lk
இணையத்தளம் - www.paffrel.lk

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 01 |
| 2. சனாதிபதி வேட்பாளருக்கு தேவையான தகுதிகள் | 02 |
| 3. சனாதிபதி தேர்தலில் விருப்பு வாக்கை அளித்தல் | 02 |
| 4. வேட்பு மனு தாக்கல் செய்தல் | 03 |
| 5. வாக்கெடுப்பை ஆரம்பித்தல் | 05 |
| 6. வாக்கெடுப்பை நிறைவு செய்தல் | 07 |
| 7. வாக்கெண்ணல் | 08 |
| 8. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் | 10 |
| 9. தேர்தல் முறைகேடுகள் | 14 |
| 10. மோசடிச் செயல்கள் | 22 |
| 11. சனாதிபதித் தேர்தல் மனுக்கள் | 30 |
| 12. வாக்களிப்பதற்கு விடுமுறை பெறல் | 31 |

# அறிமுகம்

1978 ஆண்டுக்கு முன்னர் எமது நாட்டில் பிரதமரை முதன்மைப்படுத்திய அமைச்சரவையை கொண்ட பிரித்தானியாவின் வெஸ்ட்மின்ஸ்டர் ஆட்சி முறை காணப்பட்டது. எவ்வாறாயினும், 1978இல் கொண்டுவரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை கொண்ட ஆட்சி முறை எமது நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டது. அன்று தொடக்கம் நடைமுறையில் இருந்துவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி இலங்கை அரசியலில் மிகவும் தீர்மானம் மிக்க ஒரு அரசியல் காரணியாக மாறியுள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியானது அரசின் தலைவர், ஆட்சித்துறையினதும் அரசாங்கத்தினதும் தலைவர், ஆயுதந்தாங்கிய படைகளின் படைத்தலைவராகவும் இருக்கின்ற காரணத்தினால் இத்தகைய சிறப்பு அந்தஸ்தைப் பெறுகிறது.

எந்த வகையிலும் நீதித்துறை அல்லது சட்டவாக்க துறையின் கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலை செயற்பாட்டுக்கு உட்படாத ஜனாதிபதிப் பதவி தொடர்பில் அது ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்தது. இதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல் என்ற விடயத்தை தேர்தல் மேடைகளில் பிரதான கோஷமாக மக்கள் முன்னிலையில் எடுத்துச் சொல்வதற்கு பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்ததை காண முடிந்தது. எவ்வாறாயினும், வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவில்லை. அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 17 மற்றும் 19ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஜனநாயக வழி நின்று இயக்கத் தேவையான சில திருத்தங்கள் மட்டும் பிற்காலத்தில் கொண்டுவரப்பட்டன.

## அடிப்படையில் சனாதிபதியைத் தேர்தெடுப்பதற்கு உரிய சட்ட வரம்பு கீழே தரப்பட்டுள்ளது.

- 1978 அரசியலமைப்பு (19ஆவது திருத்தம் அடங்கலாக)
- திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் அத்துடன்
- தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள்

1978 அரசியலமைப்பின் 07ஆவது அத்தியாயத்தில் சனாதிபதியைத் தேர்தெடுத்தல் மற்றும் சனாதிபதியின் தத்துவங்கள் என்பன விரிவாகத் தரப்பட்டுள்ளதோடு, 2015இல் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தின் மூலம் 06 வருடங்களாகக் காணப்பட்ட சனாதிபதியின் பதவிக் காலம் 05 வருடங்களாகக் குறைக்கப்பட்டது. மேலும், அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 18ஆவது திருத்தத்தின் மூலம் ஒருவர் சனாதிபதியாகத் தேர்தெடுக்கப்படும் தடவைகளின் எண்ணிக்கை தொடர்பில் ஒரு தெளிவற்ற நிலை காணப்பட்டதோடு, 19ஆவது திருத்தத்தின் மூலம் ஒருவர் சனாதிபதியாகத் தேர்தெடுக்கப்படும் தடவைகளின் எண்ணிக்கை 02ஆக மட்டுப்படுத்தப்பட்டது.
அதன்படி, சனாதிபதித் தேர்தலொன்றுக்கான அறிவிப்பை வெளியிட்டு தேர்தலை நடாத்துதல் 19ஆவது திருத்தத்தினால் நிறுவப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் பணியாக மாற்றப்பட்டது.

## சனாதிபதி வேட்பாளராவதற்கான தகுதியீனங்கள்

- 35 வயதை பூர்த்தி செய்யாத ஒருவராக இருத்தல்.
- சனாதிபதி பதவிக்காக இரண்டு தடவைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தல்.
- இலங்கை பிரஜை அல்லாதவராக இருத்தல்.

## சனாதிபதித் தேர்தலில் விருப்பு வாக்களித்தல்

தற்போது பதவி வகிக்கும் சனாதிபதியின் பதவிக்காலம் பூர்த்தியடைய ஒரு மாத காலத்திற்குக் குறையாததும் 02 மாதங்களுக்கு மேற்படாததுமான காலப் பிரிவினுள் தேர்தல் ஆணையாளரால்

சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். வாக்கெடுப்பின்போது சனாதிபதி பதவிக்காக மூன்று வேட்பாளர்கள் போட்டியிடும் சந்தர்ப்பத்தில், வாக்காளர் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்க முடியும் என்பதுடன், மூன்றுக்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் இரண்டாவது. மூன்றாவது விருப்பு வாக்குகளையும் அளிக்க முடியும். அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் 50மூ வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் மாத்திரம் போட்டியிட்டு, அவர்கள் இருவரும் சம எண்ணிக்கையான வாக்குகளைப் பெறும் சந்தர்ப்பத்தில் வெற்றி பெற்றவரைத் தேர்ந்தெடுப்பதற்காக குலுக்கல் முறை (திருவுளச்சீட்டு) பின்பற்றப்படும்.

ஏதோவொரு வகையில் எந்த ஒரு வேட்பாளரும் செல்லுபடியான வாக்குகளில் 50மூ தைப் பெற்றிருக்காவிடின், அந்தச் சந்தர்ப்பத்தில் கூடிய எண்ணிக்கை வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் இரண்டாவது கூடிய எண்ணிக்கை வாக்குகளைப் பெற்ற வேட்பாளரும் தவிர ஏனையவர்கள் போட்டியிலிருந்து விலக்கப்பட்டு, ஒவ்வொரு வாக்காளரினதும் இரண்டாவது விருப்பு வாக்கு அந்த இருவரில் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தால், அவை அவர் பெற்ற வாக்குகளோடு சேர்க்கப்படும். இதன் வண்ணம், ஒரு வேட்பாளர் செல்லுபடியான வாக்குகளில் 50மூ தைப் பெற்றிராதிருப்பின், மேற்போந்தவாறு ஒவ்வொரு வாக்காளரினதும் மூன்றாவது விருப்பு வாக்கை கணக்கில் எடுத்து அதில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

சனாதிபதியைதி தெரிவு செய்து நியமித்தல் தொடர்பான நடவடிக்கை முறையானது 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

## நியமனப் பத்திரம் ஒப்படைத்தல்

சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரினால் வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 16 நாட்களுக்குக் குறையாததும். 21 நாட்களுக்கு மேற்படாததுமான காலப் பிரிவினுள்

தேர்தல் ஆணையாளரினால் குறித்துரைக்கப்படும் திகதி வேட்பாளர்கள் நியமனப் பத்திரத்தை ஒப்படைக்கும் கால எல்லையாகக் கருதப்படும். அத்துடன், நியமனப் பத்திரம் ஒப்படைக்கும் இடத்தையும் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட பின்பு 04 வாரங்களுக்குக் குறையாததும், 06 வாரங்களுக்கு மேற்படாததுமான காலப் பிரிவினுள் சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். இந்த வாக்கெடுப்பு தினம் ஒரு பூரணை போயா தினமாக அல்லது பொது விடுமுறை தினமாக இருத்தலாகாது.

நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 02 வார காலத்துள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் வாக்கெடுப்பு நிலையங்களாகச் செயற்படும் இடங்களைக் குறிப்பிட்டு, தேர்தல் ஆணையாளரினால் வர்தமானயில் அறிவித்தலொன்று வெளியிடப்பட வேண்டும். அத்துடன், ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிற்கும் ஒரு வாக்கெடுப்பு நிலையம் என்ற வகையில் எல்லா தேர்தல் தொகுதிகளிலும் அமைக்கப்பட வேண்டும். எனினும், விசேட சந்தர்ப்பங்களில் இந்த நிலைமை மாற்றமடையக்கூடும்.

**சனாதிபதி தேர்தல் தொடர்பான நியமனப் பத்திரம் மூன்று முறைகளில் ஒப்படைக்கப்படலாம்:**

1. வேட்பாளரின் பெயர் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியின் மூலம் முன்மொழியப்படும்போது, அந்தக் கட்சியின் செயலாளர் குறித்த நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.

2. வேட்பாளரின் பெயர் வேறு ஓர் அரசியல் கட்சியின் மூலம் முன்மொழியப்படும்போது, அந்தக் கட்சியின் செயலாளர் குறித்த நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.

3. வேட்பாளரின் பெயர் யாரேனுமொரு வாக்காளரினால் முன்மொழியப்படும்போது வாக்காளர் அட்டையில் பெயர் பதிவுசெய்யப்பட்ட அந்த வாக்காளரால் நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும்.

நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட பின்பு ஓர் எதிரணி வேட்பாளரினால் அல்லது எதிரணி வேட்பாளரின் நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்ட நபரினால் யாதேனுமொரு வேட்பாளர் தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால், தேர்தல் ஆணையாளரினால் குறித்துரைக்கப் படும் காலத்துள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியும்.
அவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பதன் செல்லுபடியான தன்மை தொடர்பாக ஆணையாளர் காலம் தாழ்த்தாமல் தீர்மானிக்க வேண்டும். அத்துடன், யாதேனுமொரு வகையில் நியமனப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பின், அதற்கான காரணத்தை விளக்கி குறித்த வேட்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

நியமனப் பத்திரம் ஒப்படைப்பதற்காக வேட்பாளரும், நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டவரும் மற்றுமொருவரும் தவிர்ந்தவிடத்து தேர்தல் ஆணையாளரின் அனுமதியின்றிய வேறு எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. நியமனப் பத்திரம் ஒப்படைக்கும் மற்றும் எதிர்ப்புத் தெரிவிக்கும் காலப்பிரிவு முடிவடைந்த உடனடுத்து, ஒரேயொரு வேட்பாளர் மாத்திரம் நியமனப் பத்திரத்தை ஒப்படைக்கப்பட்டிருந்தால், அந்த வேட்பாளரை சனாதிபதி பதவிக்கு தெரிவு செய்வதுடன், தேர்தல் ஆணையாளரால் அது பற்றி வர்த்தமானியில் அறிவித்தலொன்று வெளியிடப்பட வேண்டும். ஒரு நியமனப் பத்திரமேனும் கிடைக்கப்பெறாதிருப்பின், இரண்டாவது தடவையாக நியமனப் பத்திரம் ஒப்படைப்பதற்கான ஒரு திகதியை தேர்தல் ஆணையாளர் குறித்துரைக்கலாம். அதுவும் முன்பு பின்பற்றிய முறையிலேயே இடம்பெற வேண்டும். ஒரு அபேட்சகருக்கு மேற்பட்டோர் நியமனப் பத்திரங்களை ஒப்படைத்திருந்தால், தேர்தல் ஆணையாளர் வாக்கெடுப்பை நடாத்த வேண்டும்.

## வாக்கெடுப்பை ஆரம்பித்தல்

நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்கள் முடிவடைவதற்கு முன்பதாக சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும், நடைபெறும் திகதி மற்றும் வாக்கெடுப்பு இடம்பெறும் நேரம், வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேட்பாளர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்தல் சின்னங்கள், விண்ணப்பித்துள்ள அரசியல் கட்சியின் அல்லது வாக்களரின் பெயர்

போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு தேர்தல் ஆணையாளர் வர்த்தமானியிலும், செய்தித் தாள்களிலும் அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

நியமனப் பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளவிடத்து, யாதேனும் ஒரு வேட்பாளர் மரணித்தால், தேர்தல் ஆணையாளர் நியமனப் பத்திரம் ஒப்படைத்துள்ள கட்சியின் செயலாளருக்கு அல்லது வாக்காளருக்கு வேறு ஒரு வேட்பாளரைப் பெயர் குறித்து நியமிக்குமாறு அறிவிக்க முடியும். அவ்வாறு 03 நாட்களுக்குள் வேறு ஒரு வேட்பாளர் நியமிக்கப்படாவிடின், எஞ்சிய வேட்பாளர்களிடையே மாத்திரம் வாக்கெடுப்பை நடாத்த முடியும்.

## தபால் மூல வாக்கெடுப்பு

சனாதிபதித் தேர்தலின்போது தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள வாக்காளர்கள் தபால் மூலம் தமது வாக்கை அளிக்க முடியும். அதேவேளை, அவர்கள் தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க முடியாது.

தேர்தல் தினத்தன்று தேர்தல் ஆணையாளரின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தெரிவத்தாட்சி அலுவலரால் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதேவேளை, வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தேவையான அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் அந்தந்த தேர்தல் தொகுதிகளின் வாக்காளர் பெயர் பட்டியலின் பிரதியொன்றையும், வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குப் பெட்டிகளையும், வாக்குச் சீட்டுக்களையும், தேவையான உபகரணங்களையும் வழங்க வேண்டம். வாக்குச் சாவடிக்குள் வாக்காளர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குகின்ற அறிவித்தல்களும், வேட்பாளர்களின் பெயர்களும், வேட்பாளர் சின்னங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும். தேர்தல் ஆணையாளரால் குறித்துரைக்கப்பட்ட தினத்தில் மு.ப 7.00 மணிக்கு வாக்கெடுப்பை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன்,

அன்றையதினம் பி.ப. 4.00 மணிக்கு வாக்கெடுப்பை நிறைவு செய்ய வேண்டும்.

## வாக்கெடுப்பை நிறைவு செய்தல்

குறிப்பிட்ட நேரத்தில் வாக்குச் சீட்டுகள் விநியோகிப்பதை நிறுத்த வேண்டும் (அன்றேல், வாக்குச் சாவடி முகவருக்கு அதனைச் சுட்டிக்காட்ட முடியும்)

**வாக்கெடுப்பு நிறைவுபெறும் போது:**
வாக்கெடுப்பு நிறைவடைந்த உடனடுத்து, வாக்குச் சாவடி முகவர்கள் முன்னிலையில் பின்வருவன இடம்பெற வேண்டும்

(அ) வாக்குப் பெட்டிகளைக் கிரமமான முறையில் இலச்சினையிடுதல்.

(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் பழுதான வாக்குச் சீட்டுக்களை வெவ்வேறாக பைக்கற்றுக்களில் இட்டு இலச்சினையிடுதல்.

(இ) வாக்களிக்கப்பட்ட தேர்தல் இடாப்பின் பிரதகளை உறையினுள் இட்டு இலச்சினையிடுதல்.

(ஈ) வாக்குச்சீட்டு விநியோகிக்கப்படாத நபர்களின் பெயர் பட்டியலைத் தயாரித்தல்.

(உ) கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டு நிரலைத் தயாரித்தல்.
(ஊ) வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டு அடியிதழ்கள் தொடர்பான பட்டியலைத் தயாரித்தல்.

(எ) பாவிக்கப்படாத வாக்குச்சீட்டுகள் தொடர்பான பட்டியல் தயாரித்தல்.

“வாக்குச் சீட்டு விபரம்” ஒன்றையும் தயாரித்து இலச்சினையிட்டு ஒப்படைக்க வேண்டும்.

## வாக்கெண்ணும் நிலைய முகவர்கள்

கட்சியின் செயலாளர், அதிகாரம் பெற்ற முகவர் அல்லது குழுத் தலைவர் ஆகியோரினால் வாக்கு எண்ணும் நிலைய முகவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

- ஒரு நிலையத்தில் வாக்குகளை எண்ணும் இடங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவையாக அமைந்திருக்குமாயின் 05 பேரும்,

- ஒரு வாக்கு எண்ணும் இடம் மாத்திரம் அமைந்திருக்குமாயின், 02 பேரும் வாக்குகளை எண்ணும் முகவர்களாக நியமிக்கப்பட முடியும்.

வாக்குகளை எண்ணும் முகவர்களின் பெயர், முகவரி என்பன முற்கூட்டியே வாக்குகளை எண்ணும் அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். வாக்குகளை எண்ணும் சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதம் என்பவற்றுடன் அங்கு செல்ல வேண்டும். அவற்றைக் கைவசம் வைத்திருக்காவிடின், உட்செல்ல அனுமதி மறுக்கப்படலாம்.

## வாக்குகளை எண்ணுதல்

- சகல வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப் பெற்றவுடன் வாக்குகளை எண்ண ஆரம்பிக்க வேண்டும்.

- வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுக்களை எண்ணும்போது குறித்துக்கொள்வதுடன், சகல வாக்குப் பெட்டிகளிலும் உள்ள வாக்குச் சீட்டுகளை ஒன்றாகக் கலந்துவிட வேண்டும்.

- வாக்குகளை எண்ணும் வாக்குச் சீட்டின் முகப்பை மேல் நோக்கியதாக வைத்திருக்க வேண்டும். அவ்விலக்கம் தெரியும் வகையில் வைத்திருக்கலாகாது.

- வாக்குகளை எண்ணுவது தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும். இரத்துச் செய்யப்படும் வாக்குச் சீட்டுக்களில் "இரத்துச் செய்யப்பட்டது" என புறக்குறிப்பிடப்பட வேண்டும்.

- வாக்குகளை எண்ணும் போது தொடர்புபட்ட அலுவலர்களும், முகவர்களும் மாத்திரமே சமுகமளிக்கலாம். (ஒவ்வொரு வாக்குப்

பெட்டியும் ஒழுங்கான முறையில் இருக்கின்றனவா, ஏனைய செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அவ்வாறு நடைபெறாதவிடத்து அது பற்றி வாக்குகளை எண்ணும் முகவர்கள் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்ய முடியும்.)

■ வாக்குச் சீட்டுக்களைக் கற்றைகளாகக் கட்டும்போது உரிய வாக்குச் சீட்டுகளை மாத்திரம் உடையவையாக உள்ளனவா. 50 சீட்டுக்கள் மற்றும் 500 சீட்டுக்களைக் கொண்ட கற்றைகளாகத் தயார் செய்யப்படுகின்றனவா என்பதை முகவர்கள் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

■ வாக்குச் சீட்டுக்களில் இலச்சினை பொறிக்கப்பட்டு அல்லது துளையிடப்படாமல் இருக்குமாயின், அவை ஒதுக்கிவிடப்படமாட்டா எனினும், முகவர்களிடமும் அது பற்றிய கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். பொருத்தமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். வாக்குச் சீட்டுக்களை ஒதுக்கிவிட முன்னர் அவற்றை முகவர்களுக்கு காண்பித்து கருத்துக்களைப் பெற வேண்டும்.

■ ஒதுக்கப்படுகின்ற வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கைகளை வெவ்வேறாக அறிவிப்பதற்காக ஒழுங்கு மேற்கொள்ளப்படும். தேவைப்படின், முகவர்கள் அவற்றைப் பிரதி செய்து கொள்ள முடியும்.

■ ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்து மூல கூற்றொன்று தயாரிக்கப்படும் அதில் முகவர்களும் கையொப்பமிட முடியும். பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

■ வாக்குகளை எண்ணும் முகவர்களிடம் மீண்டும் எண்ணுமாறு வேண்டுகோள் விடுக்க முடியும். (ஆகக் கூடியது இரண்டு தடவைகள்)

■ வாக்குச் சீட்டுக்கள் தொடர்பாக எழுப்பப்படுகின்ற கேள்விகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் பணி, வாக்குகளை எண்ணும் அலுவலர்களுக்கு உரியதாகும்.

## வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்

தேர்தல் தினத்தன்று முகவராக நியமிக்கப்படும் கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதனைப் பின்வரும் நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்

■ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளர்

■ அல்லது செயலாளரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி

■ சுயேட்சைக் குழுவாயின், அந்நியமனக் கடிதத்தில் முகவரின் பெயர், முகவரி, இனம், அடையாள அட்டையின் இலக்கம் என்பன குறிப்பிடப்பட வேண்டும். அத்தோடு, அடையாள அட்டையையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

■ நியமனக் கடிதம் விநியோகிப்பதற்கு அதிகாரம் உள்ள நபரைப் பற்றி தேர்தல் தினத்திற்கு 07 நாட்கள் முன்பதாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

■ வாக்கெடுப்பு நிலைய முகவரின் நியமனத்தை இரத்துச் செய்து புதிய முகவரைத் தெரிவு செய்யும் போதும் மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கியதாக எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

■ வாக்கெடுப்பு நிலைய முகவரின் நியமனத்தை இரத்துச் செய்து புதிய முகவரைத் தெரிவு செய்யும் போதும் மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கியதாக எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

■ ஒரு கட்சி அல்லது குழு சார்பாக இரு முகவர்களுக்கு மேற்பட்டவர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க முடியாது.

வாக்கெடுப்பு நிலையத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிக்கு நல்க வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கியிருக்க அதிகாரம் பெற்றவர்களைத் தவிர ஏனையவர்கள் வெளியேற்றப்படலாம். ஆகையால், வேறு யாரேனுமொருவர் உட்பிரவேசிக்க முற்படும் போது வெளிச் செல்லுமாறு தெரிவிக்கலாம்.

## வாக்கெடுப்பை ஆரம்பிக்க முன்னர்

தலைமைதாங்கும் அலுவலர் வாக்குச் சீட்டுகள், உத்தியோகபூர்வ இலச்சினை, உத்தியோகபூர்வ சின்னம், தேருநர் இடாப்பின் பிரதி என்பவற்றை வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்குக் காண்பிக்க வேண்டும். வாக்குப்பெட்டி வெறுமையாக உள்ளதையும் காண்பிக்க வேண்டும். அதன் பின்னர் அதனைப் பூட்டி இலச்சினையிட வேண்டும். புதிதாக பாவிக்கப்படும் ஒவ்வொரு வாக்குப் பெட்டிக்கும் இவ்வாறே செய்ய வேண்டும்.

(வாக்கெடுப்பு ஆரம்பிக்க முன்னர் மேற்கூறப்பட்ட விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாதலால், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டும்)

## வாக்குச் சீட்டுகள்

தேருநர் இடாப்பின் பிரதியில் கூறப்பட்டவாறான வாக்காளரின் இலக்கமும், பெயரும் விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும். வாக்காளரின் இலக்கமானது அடியிதழ்த்தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும.

வாக்காளரின் பெயர் இடாப்பில் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டதற்கான அடையாளத்தை இட வேண்டும். ஆனால் அவருக்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட வாக்குச்சீட்டு என்ன என்பதை அவர் தெரிந்துகொள்வதற்கு இடமளித்தலாகாது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் கிரமமான முறையில் இடம்பெறாவிடின், வாக்குச் சாவடி முகவர்கள் அது பற்றி வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்க முடியும்.

வாக்காளரின் விரலொன்றில் முறையாக மை பூசப்பட வேண்டும். மை பூசுவதை வாக்காளர் தடுக்க முடியாது. மை பூசப்படாத வரையில் வாக்காளருக்கு வாக்குச் சீட்டை வழங்கலாகாது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் கிரமமான முறையில் நிறைவேற்றப்படாவிடின், நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்யும் அதேவேளையில், வாக்கெடுப்பு நிலைய முகவர் அது தொடர்பாக குறிப்பு எடுத்துக்கொள்ளலாம்.

## வாக்காளர்களுக்கு உதவுதல்

யாதேனும் ஒரு வாக்காளர் வேண்டுகோள் விடுப்பாராயின், வாக்களிக்கும் முறையை அவருக்கு விளக்க வேண்டும். சொல்லப்பட்ட அறிவுறுத்தல்களை தலைமை தாங்கும் அலவலர் இன்றேல் தொடர்புபட்ட அலுவலர் ஒருவர் வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்குக் கேட்கக் கூடியவாறு குறித்த வாக்காளருக்கு விளக்க வேண்டும். வலது குறைந்தவர் ஒருவர், விழிப்புலன் இழந்தவர் ஒருவர் மற்றுமொரு அலுவலரின் முன்னிலையில் அவருக்கு அவசியமான விதத்தில் வாக்குச் சீட்டில் புள்ளடியிட வேண்டும்.

மேற்படி சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நிலைய முகவர் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

யாதேனும் ஒரு வாக்காளரின் ஆள் அடையாளம் பற்றி ஐயம் ஏதும் எழுமாயின், அவரின் தேசிய அடையாள அட்டையைப் பரீட்சிக்க முடியும். நிலையப் பொறுப்பதிகாரி, வாக்காளர் மூலம் “ஈ”, “உ”, “ஊ”, “எ” ஆகிய மாதிரிப் படிவங்களை நிரப்பி கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அந்தப் பிரகடனங்களில் கையொப்பமிட அவர் மறுப்பாராயின், வாக்குச் சீட்டு வழங்க மறுக்கலாம்.

அவ்வேளை, பொய்ப் பிரகடனம் செய்தல் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றமாகும். (நீதவான் நீதிமன்றத்தினால் அந்தக் குற்றத்திற்காக ரூ.500 தண்டப் பணம் அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்).

மேற்போந்த சந்தர்ப்பங்களில் சட்டத்திற்கு அமைவாக அந்த நடவடிக்கை இடம்பெறாதவிடத்து வாக்குச் சாவடி முகவர், அது குறித்து நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சுட்டிக் காட்டுவதுடன், அதனைக் குறித்துக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்க முடியும்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்கள், முகவர்கள் சார்ந்த கடமைகளும் பொறுப்புகளும்:

வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது வாக்கெண்ணும் நிலையத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அலுவலர்கள், முகவர்கள், அந்த இடத்திற்கு வர அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்கள், எழுதுநர்கள், வேட்பாளர்கள், முகவர்கள் ஆகியோர் ஓர் இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகையைச் செய்தல் வேண்டும்.

■ இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதுடன், அதனைப் பாதுகாப்பதற்காக அவர்கள் உதவவும் வேண்டும்.

■ வாக்காளர் ஒருவரின் பெயர் அல்லது இலக்கம் அல்லது பதவி இலச்சினை பற்றி சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறு அன்றி, யாதொருவருக்கும் தெரிவிக்கப்படலாகாது.

■ வாக்களிக்கும் அல்லது வாக்களித்துள்ள கட்சியை அல்லது குழுவை அல்லது வாக்குச் சீட்டின் பின் புறத்தில் உள்ள இலக்கத்தை தெரிவித்தலாகாது.

■ வாக்குகளை எண்ணும் போது வாக்குச் சீட்டுடன் தொடர்பான எண்ணை உறுதிப்படத் தெரிந்திருத்தலாகாது.

■ வாக்குச் சாவடியில் வாக்களிக்க முன்னர் வாக்காளருடன் கதைக்கலாகாது.

■ இவற்றின் கீழ் குற்றவாளியாகக் காணப்படின், ரூ. 500 தண்டப் பணம் அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். 07 ஆண்டுகளுக்கு குடியுரிமை பறிக்கப்படும்.

## பின்வருவோர் மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிக்கலாம்.

1. வாக்கெடுப்பு நிலையத்திற்கு அவசியமான பணியாட்கள்

2. அங்கு கடமையில் ஈடுபடும் பொலிஸ் அலுவலர்கள்.

3. கள நடவடிக்கைகளுக்காக வருகை தரும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

4. ஆளடையாள அட்டையுடன், நியமனக் கடிதத்தைக் கைவசம் வைத்திருக்கும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்.

5. வேட்பாளர்கள் (ஒரு தடவைக்கு ஒருவர் மாத்திரமே நிலையத்தினுள் இருக்க முடியும்).

6. போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள்.
7. பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள்.

மேலே சொல்லப்பட்டவர்கள் அல்லாத ஏனையவர்கள் அங்கு உட்பிரவேசிப்பது தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

## தேர்தல் தவறுகள்

■ ஏதேனும் நியமனப் பத்திரத்தை போலியாகப் புனைதல், மோசடியாக உருவழித்தல், மோசடியாக அழித்தல் அல்லது அந்நியமனப் பத்திரம் போலியானதென்பதை தெரிந்துகொண்டு தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல்.

■ வாக்குச்சீட்டிலுள்ள அலுவலக முறையான குறியீட்டை போலியாக புனைதல், பொய்யாகப் புனைதல், மோசடியாக உருவழித்தல் அல்லது மோசடியாக வாக்குச் சீட்டின் உத்தியோகபூர்வ இலச்சினையை மோசடியாக அழித்தல்.

■ உரிய அதிகாரமின்றி வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல், வாக்குச் சீட்டுக்களை விற்றல் அல்லது கொள்வனவு செய்தல்.

■ குறியிடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்தில் வேண்டுமென்று வெளிக்காட்டுதல..

■ அலுவலக குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை அதிகாரமின்றி உடைமையில் வைத்திருத்தல்.

■ ஒரு வாக்காளர், வாக்குச் சீட்டு தவிர்ந்த வேறு எதனையும் வாக்குப் பெட்டிக்குள் இடுதல்.

■ வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுக்களின் பொதியை முறையான அதிகாரமின்றி அழித்தல், திறத்தல் அல்லது வேறு வகையில் அவற்றுடன் சம்பந்தப்படுத்தல்.

■ தேர்தல் ஒன்றின்போது முறையான அதிகாரம் இன்ற வாக்குச் சீட்டுக்களை அச்சிடல்.

■ ஒரு தேர்தல் காலப்பகுதியில் வாக்குச்சீட்டுப்பெட்டியினுள் இடப்பட்ட வாக்குச்சீட்டொன்றை குடைந்து வெளியே எடுப்பதற்கான உபகரணங்களை தயாரித்தல் இறக்குமதி செய்தல் அல்லது வழங்குதல.

■ தபால்மூல வாக்காளர் அவரது அடையாளம் பற்றிய வெளிப்படுத்துகையில் வேண்டுமென்றே பொய்யான கூற்றொன்றை வழங்குதல்.

■ தபால் வாக்காளருக்கு அனுப்பப்படும் கடிதமேலுறை, வாக்குச்சீட்டு உறை எதனையும் முறையான அதிகாரமின்றி அழித்தல் அல்லது திறத்தல் அல்லது அதனுடன் எதனையும் சேர்த்தல்.

■ முறையான அதிகாரமின்றி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை அச்சிடுதல்.

■ வாக்கெடுப்பு நடைபெறும்போது வாக்காளர் தவறாகப் புரிந்துகொள்ளத் தக்க ஒரு குறியீட்டை அல்லது வேறு யாதேனும் ஒன்றை இடுதல்.

■ வாக்கெடுப்பு நடைபெறும் வேளையில், வாக்காளர் ஒருவர் தொடர்பில் இடப்பட்ட பொருத்தமான ஒரு குறியீட்டை உரிய அதிகாரம் இன்றி மோசடியாக உருமாற்றம் செய்தல்.

■ வாக்களிக்கத் தகுதியற்றவரென தெரிந்துகொண்டு வாக்களித்தல்.

■ மேற்படி தவறுகள் தொடர்பில் ஒருவர் குற்றவாளியாக இனங்காணப்படின், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாம்.

**குடியுரிமை இழந்தவர்கள் ஏழு ஆண்டுகள் கழியும் வரையில் வாக்களிக்க முடியாது.**

■ வேட்பாளர் சார்பாக வாக்குகளைக் கேட்டல்

■ ஒரு வேட்பாளரின் முகவராகச் செயற்படல்

■ உரையாற்றுதல் அல்லது தேர்தலின்போது யாதொரு வகையிலும் பங்குபற்றுதல் ஆகாது.

அவ்வாறு செயற்படின், நீதவான் ஒன்றினால் ரூ. 1000 தண்டப்பணம் அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

## தேர்தல் தினத்தன்று தடுக்கப்பட்ட செயல்கள்

வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பு நடைபெறும் வேளையில், குறித்த இடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் வரையான எல்லையினுள் பின்வரும் செயல்களைப் புரிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

■ வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கோருதல்.

■ குறிப்பான வாக்காளர் ஒருவரின் வாக்கைக் கோருதல்.

■ குறிப்பான ஒரு கட்சிக்கு அல்லது ஒரு குழுவுக்குச் சார்பாக வாக்களிக்க வேண்டாம் என வாக்காளர் ஒருவரைத் தூண்டுதல்.

■ தேர்தலில் வாக்களிப்பைப் புறக்கணிக்குமாறு வாக்காளர் ஒருவரைத் தூண்டுதல்.

■ வாக்கெடுப்புடன் தொடர்பான (ஓர் உத்தியோகபூர்வ ஆவணம் அல்லாத) ஒரு துண்டுப்பிரசுரம், சுவரொட்டி, அறிவித்தல், ஓவியம், நிழற்படம் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது ஒரு குழுவுக்கு உரிய இலச்சினையை விநியோகித்தல் அல்லது காட்சிப்படுத்தல்.

**தண்டனை:** நீதவான் நீதிமன்றத்தின் சுருக்க முறை விசாரணை ஒன்றின் பின்னர் தவறு நிரூபிக்கப்படின், ரூ. 100 தண்டப் பணம் அல்லது 06 மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

## வாக்கெடுப்பு நிலையத்தின் சுற்றயலில் தவறான நடத்தை

வாக்கெடுப்பு நிலைய எல்லையினுள் வாக்கெடுப்பு நிலையத்தை நோக்கி வருவோருக்கு, கடமையில் ஈடுபட்டிருக்கும் அலுவர்களுக்கு அல்லது ஏனையோரின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் விதத்தில்,

- ஒலிபெருக்கிக் கருவிகளை உபயோகித்தல்.
- உரத்துப் பேசுதல்/சத்தமிடல்.
- ஒழுங்கீனமாக நடந்துகொள்ளல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன.

மேற்படி செயல்களுக்கும் மேலே சொல்லப்பட்ட தண்டனை விதிக்கப்படலாம்.

அவ்வாறான செயல்களைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, பொலிஸார் அதிகாரத்தைப் பிரயோகிக்கதற்கும், ஒரு சிலரைக் கைது செய்வதற்கும், 1981ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஊர்வலங்களை நடாத்துதல்

தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதி வரையில் உர்வலங்களை ஏற்பாடு செய்தல், அவற்றை வழி நடாத்துதல் அல்லது அவற்றில் கலந்துகொள்ளல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்குப் பக்கபலமாக அமையும் விதத்தில் மதம், சமூகம் சார்ந்த பணிகளுக்காக ஊர்வலங்களை நடாத்த முடியும். (உதாரணமாக: மே தின ஊர்வலம், பொசன் பெரஹரா ஊர்வலம் முதலியன)

**சட்டத்தை மீறினால் தண்டனை :** ஒரு மாத கால சிறைத் தண்டனை அல்லது ரூ.100 தண்டப் பணம் அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

## பொதுக்கூட்டங்களை நடாத்துதல்

தேர்தல் நடைபெற இரு தினங்களுக்கு முன்னர் (48 மணி நேரத்திற்கு முன்னர்) தொடங்கி, தேர்தல் பெறுபேறுகள் வெளியாகி ஒரு வார காலம் கழியும் வரையில் பொதுக் கூட்டங்களை நடாத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. (நீதவான் நீதிமன்றம் ஒன்றினால் இதற்கு உரிய தண்டனையாக, ஒரு மாதகால சிறைத் தண்டனை அல்லது ரூ.100 தண்டப் பணம் அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

## மேற்போந்த தவறுகளைப் புரிவதற்காக எத்தனிப்பதும் ஒரு குற்றமாகும்.

மேலே சொல்லப்பட்ட தவறுகளுக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். (கடந்த காலங்களில் அவ்வாறு சார்த்துதல் செய்யப்பட்ட ஒரு சில தவறுகளுக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபரினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது)

## வேட்பாளர்கள் அல்லாதவர்களின் தேர்தல் நடவடிக்கைகள்

அச்சிட்டோர், வெளியீட்டாளரின் பெயரும், முகவரியும் இன்றிய நிலையில் வெளியிடப்படும் பிரசார விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை அச்சிடல், வெளியிடல், பகிர்ந்தளித்தல் ஒட்டுதல் ஆகியன வேட்பாளர் அல்லாதவர்கள் இழைக்கும் தவறுகளாகும். அதற்காக நீதவான் நீதிமன்றத்தினால் ரூ. 500 தண்டப் பணம் விதிக்கப்படலாம். (அவ்வாறு குறிப்பிடாமை சடுதியாக ஏற்பட்ட ஒரு தவறாயின், அதனை நிரூபிக்க வேண்டும்.

(கவனிக்க: வேட்பாளர் ஒருவர் அல்லது அவரின் முகவர் ஒருவர் அவ்வாறான செயலைப் புரிவது "சட்ட விரோதமான செயல்களின்" கீழ் ஒரு குற்றமாகும்)

## தேர்தல் அலுவலகங்களின் எண்ணிக்கை

தேர்தல் அலுவலகங்கள் பொதுவாக வாக்கெடுப்பு அலுவலகங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அத்தகைய அலுவலகங்கள் இரு

வகைப்படும். அவற்றுள் ஒன்று ஊடக அலுவலகமாகும். மற்றையவை கிளை அலுவலகங்களாகும்.

ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு ஓர் ஊடக அலுவலகம் என்ற விதத்தில் காணப்படும். கிளை அலுவலகங்கள் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலும் (Polling District) நிறுவப்படும்.

குறித்த தொகுதியின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் அல்லது குழுத் தலைவர் ஒருவர் மாத்திரமே அலுவலகங்களை நடாத்திச் செல்லலாம்.

## அலுவலகங்களை நடாத்திச் செல்ல வேண்டிய கால வரையறை

வேட்புமனுத் தாக்கல் செய்த தினம் தொடங்கி வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முன்னைய தினம் வரையில் ஊடக அலுவலகம் இயங்க முடியும். கிளை அலுவலகங்கள் அது முதற்கொண்டு அதாவது, வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினத்தில் தொடங்கி வாக்கெடுப்பு தினத்திற்குப் பின்னைய தினம் வரையில் இயங்கலாம்.

இதற்கு இணங்க, அந்த இரு வகை அலுவலகங்களையும் ஒரே வேயைில் நடாத்திச் செல்ல முடியாது. மாவட்ட அலுவலகத்தை மூடிவிட்டு, கிளை அலுவலகங்களைத் திறக்க வேண்டும்.

இந்த அலுவலகங்களை நடாத்திச் செல்வது பற்றி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் (Returning Officer) பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் (O.I.C) அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் காரணமாக, அவை அறிவிப்பு (Notified) அலுவலகங்கள் என அழைக்கப்படுகின்றன.

மேற்கண்ட வரையறையின் கீழ் வேட்பாளர் ஒருவர் தனது வீட்டைத் தேர்தல் அலுவலகமாக நடாத்திச் செல்லலாம்.

இந்தச் சட்டத்தை மீறுவதும், மீறுவதற்கு எத்தனிப்பதும் ஒரு குற்றமாகும். வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்ட மா அதிபரின் அங்கீகாரம் பெறப்படுவது அவசியமாகும். குற்றத்திற்கான

தண்டனையாக, ரூ. 100 தண்டப் பணம் அல்லது ஒரு மாதகால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

வேட்பாளர் ஒருவர், தமக்கு உரிய தேர்தல் சின்னத்தைப் பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே காட்சிப்படுத்தலாம். வேட்பாளர் ஒருவர் பவனி வரும் ஒரு வாகனத்தில் அல்லது வேட்பாளருக்கு ஆதரவு திரட்டி நடாத்தப்படும் ஒரு கூட்டத்தில், குறித்த தினத்தில் குறித்த இடத்தில் மாத்திரமே அவற்றைக் காட்சிப்படுத்த முடியும். அவ்வாறன்றி, தேர்தல் சின்னத்தைக் காண்பிப்பது ஒரு குற்றச் செயலாகும். அவ்வேளை பிடியாணை இன்றியே கைது செய்ப்படலாம். அந்தக் குற்றச் செயல்கள் அல்லது எத்தனிப்புகளைத் தடுக்கும் பொருட்டு பொலிஸ் அலுவலர்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். நீதவான் நீதிமன்றம் ஒன்றின் சுருக்க முறை விசாரணை ஒன்றின் பின்னர், ஒரு மாத கால சிறைத் தண்டனை அல்லது ரூ. 100 தண்டப் பணம் அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

அவற்றைக் கைப்பற்ற அல்லது அகற்றுவதற்கான அதிகாரம் பொலிஸ் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## வாக்குக் கேட்டல்

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான திகதி முடிவடைந்த தினத்திலிருந்து வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு மறுநாள் வரை வேட்பாளர் ஒருவர் அல்லது அவரின் குடும்ப உறுப்பினர்கள் (குடும்ப உறுப்பினர்கள் எனப்படுவோர் (கணவன், மனைவி, மகன், மகள், மருமகன், மருமகள்) பின்வரும் செயல்களைப் புரிவது ஒரு குற்றமாகும்

- வாக்குகளைக் கேட்டு வீடுவீடாகச் செல்லல்
- கட்சிக்கு அல்லது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாம் என ஏனையோரைத் தூண்டுதல்.
- தேர்தலின் போது வாக்குகளைப் பிரயோகிக்க வேண்டாம் எனத் தூண்டுதல்.

துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள், ஓவியங்கள், நிழற்படங்கள், இலச்சினைகளைக் காண்பித்தல்.

இந்தக் குற்றச் செயல்களைப் புரியுமிடத்து, வேட்பாளர் நீதவான் நீதிமன்றமொன்றினால் ரூ. 100 தண்டப் பணம் அல்லது ஒரு மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படலாம்.

## இரகசியத் தன்மை/இரகசியத் தன்மையைப் பேணுதல்

வாக்குச் சாவடிக்கு அல்லது வாக்கெண்ணும் நிலையத்திற்கு சமுகமளிக்க அதிகாரம் பெற்ற அலுவலர்கள், எழுதுநர்கள், முகவர்கள் வேட்பாளர்கள் ஆகியோர் உரிய இரகசிய பிரகடனத்தில் கையொப்பமிட வேண்டும்.

சொல்லப்பட்ட பிரகடனங்கள், பின்வரும் குற்றங்களைப் புரிவதில்லை என்பதற்கான ஒரு வாக்குறுதியாகும்.

■ வாக்குச் சீட்டொன்றுக்கான விண்ணப்பித்துள்ள அல்லது வாக்காளர் ஒருவரின் பெயர், இலக்கம் அல்லது உத்தியோகபூர்வ இலச்சினை பற்றிய யாதேனும் ஒரு தகவலை வாக்கெடுப்பு பூர்த்தியடையும் முன்னர் பகிரங்கப்படுத்தல்.

■ மேலே சொல்லப்பட்ட தனி நபர்களால் யாதேனும் ஒரு வாக்காளர் எந்தக் காட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களிக்கச் செல்கின்றார் அன்றேல் வாக்களித்தார் என்பது போன்ற விபரங்களை வாக்கெடுப்பு நிலையத்தில் கேட்டறிய எத்தனித்தல்.

■ வாக்காளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டின் பின்புறத்தில் உள்ள இலக்கம் தொடர்பான ஒரு தகவலை யாதேனும் ஒருவருக்குத் தெரிவித்தல்.

■ மேலே சொல்லப்பட்ட ஆட்கள், வாக்குகளை எண்ணும் வேளையில் வாக்குச் சீட்டின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கத்தைத் தெரிந்துகொள்ள எத்தனித்தல்.

■ வாக்குச்சீட்டு ஒன்றின் மூலம் வாக்களித்துள்ள கட்சி அல்லது குழு பற்றிய தகவல்களை யாதேனும் ஒருவருக்குத் தெரிவித்தல்.

■ இந்தச் சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலைய பொறுப்பதிகாரியினால் அல்லது அந்த அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அன்றி, பிறிதொருவரினால் யாதேனும் ஒரு வாக்காளர் வாக்குச் சீட்டை வாக்குப் பெட்டியினுள் இடுவதற்கு முன்னர் வாக்காளருடன் கதைத்தல்.

■ மேற்போந்த குற்றச் செயல்களைப் புரிவதற்காக எத்தனிப்பதும் ஒரு குற்றமாகும்.

■ நீதவான் நீதிமன்றத்தின் சுருக்க முறை விசாரணை ஒன்றின் பின்னர் ரூ. 500 தண்டப் பணம் அல்லது 06 மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

குற்றப் பொறுப்புடையவர் எனக் கண்டால், 07 ஆண்டு காலத்திற்கு குடியுரிமையை இழக்க நேரிடும்.

## மோசடிச் செயல்கள்

**பின்வரும் குற்றச் செயல்களை தேர்தல் மோசடி சார்ந்த செயல்களாக அறிமுகப்படுத்தலாம்:**

## ஆள் மாறாட்டம் (கள்ள வாக்கு)

உயிர் வாழும் அல்லது மரணித்த ஒருவர் சார்பாக தனிப்பட்ட முறையில் அல்லது தபால் மூலம் வாக்களிப்பதும், தமது பெயரில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களிப்பதும் கள்ள வாக்குப் போடுதலாகும்.

■ இதற்காக, வாக்களித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வாக்குச் சாவடி ஒன்றில் வாக்களிப்பதற்காக வாக்குச் சீட்டொன்றைக் கோருவதன் மூலமும்,

■ தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதன் மூலமும்,

■ தபால்மூல வாக்குச் சீட்டொன்றின் புள்ளடி இடுவதன் மூலமும் இந்தக் குற்றச் செயல் பூரணத்துவம் பெறும்.

## ஊபசரணைகள்

■ தேல்தலுக்கு முன்னர் அல்லது தேர்தலுக்குப் பின்னர் அல்லது அதனிடையயே வாக்களிப்பதற்காக அன்றேல் வாக்களிக்காமல் இருப்பதற்காக உபசரணைகளை மேற்கொள்வது ஒரு குற்றமாகும்.

■ தம்மால் அல்லது பிறிதொருவர் மூலமாக அத்தகைய செயலைப் புரிவதும் ஒரு குற்றமாகும். மற்றைய ஒருவரின் வாக்கைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வாக்களிக்காமல் இருத்தல் பொருட்டு ஆளொருவருக்கு உபசரணைகளை மேற்கொள்வதும் ஒரு குற்றமாகும்.

## உபசரணைகளை மேற்கொள்வதானது ன்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்

■ நேரடியாக அல்லது பிறிதொரு வகையில் உணவுப் பொருட்கள், பானங்கள் அல்லது வேறு உண்டிகளை வழங்குதல் அல்லது விநியோகித்தல்.

■ அத்தகையவற்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அனுமதிச் சீட்டொன்றை அல்லது வேறு நுட்பமுறை ஒன்றைக் கையாளல்.

■ அத்தகையவற்றை வழங்குவதற்காக ஏற்படும் செலவை ஈடுசெய்ய வாக்குறுதியளிததல்.

■ அத்தகைய உபசரணை ஒன்றை வழங்கல் அல்லது விநியோகித்தல் போன்றே. அதனைப் பெற்றுக்கொள்ளல் அல்லது பெறுவதற்கான நுட்பமுறை ஒன்றைக் கையாளல் ஆகியனவும் உபசரணை மேற்கொள்வதற்கான குற்றம் சார்ந்தாகும்.

## முறைகேடான செல்வாக்கு

முறைகேடான செல்வாக்கு என்பது வாக்குரிமையைச் சுதந்திரமாகப் பிரயோகிப்பதற்கு அல்லது அவ்வாறு பிரயோகிக்காமல் இருப்பதற்கு இடையூறாக அமைதல் அல்லது தூண்டுதல் ஆகும்.

யாதேனும் ஒரு தேர்தலில் வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்காகத் தூண்டுதல் அளிப்பதற்காகவும், வாக்களித்துள்ளமை அல்லது அவ்வாறு வாக்களிப்பதிலிருந்து விலகி இருப்பதன் காரணமாக நேரடியாக அல்லது பிறிதொரு வகையில் முறைகேடான செல்வாக்குகள் மேற்கொள்ளப்படலாம்.

தம்மால் அல்லது பிறிதொருவர் மூலம் யாதேனும் ஆள் ஒருவருக்கு அல்லது அவர் சார்பாக பிறிதொருவருக்கு முறைகேடான செல்வாக்குகள் பிரயோகிக்கப்படலாம்.

செல்வாக்கு, ஏமாற்று, இடையூறு அச்சுறுத்தல் நேரடியாக அல்லது பிறிதொருவர் மூலமாக மேற்கொள்ளப்படலாம்.
இத்தகைய செல்வாக்குகளின் பௌதிக அல்லது உளத்தாக்கம், இழப்பு, சேதம், சாபம் ஏற்படும் என அச்சுறுத்துவது, கடத்திச் செல்வதாக உணர்த்துவதன் மூலம் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

வேட்புமனுத் தாக்கல் செய்த தினத்திலிருந்து வாக்கெடுப்பு தினத்திற்கு பின்னைய தினம் வரையிலான் காலத்தில் யாதேனும் ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்காகத் தூண்டுதல் அளிக்குமாறு மத சார்பான கூட்டமொன்றில் தெரிவித்தல், அத்தகைய மத சார்பான கூட்டமொன்றில் தேர்தல் பிரசாரங்கள், அறிவித்தல்கள், ஓவியங்கள், நிழற்படங்கள், கொடிகள் ஆகியவற்றைப் பகிர்ந்தளித்தல் அல்லது காண்பித்தல், தேர்தல் களத்தில் இறங்கியுள்ள ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு ஆதரவாக புனிதத் தளமொன்றில் பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் ஆகியன முறைகேடான செல்வாக்கைப் பிரயோகிப்பதாகும்.

தேர்தல் காரணங்களின் பேரில் புனித மத அனுட்டானங்கள் மேற்கொள்ளாமல் இருப்போம் என அச்சுறுத்தல் விடுத்தல் அல்லது அந்த மத அமைப்பிலிருந்து வெளியேற்றுவதாக அச்சுறுத்தல் விடுத்தல் முறைகேடான செல்வாக்காகும்.

ஒரு கட்சிக்கு அல்லது குழுவிற்கு வாக்களித்தல் அல்லது வாக்களிக்காமை பொருட்டு அல்லது வாக்களித்திருத்தல் அல்லது வாக்களிக்காமல் இருத்தல் காரணமாக வேலை கொள்வோர்.

■ வேலையை விட்டு விலகுதல் அல்லது அவ்வாறு செயற்படுவதாக அச்சுறுத்தல் விடுப்பதும்.

■ வேலையில் ஈடுபட்டிருக்கும வேளையில் அனுபவித்த அன்றேல் அனுபவிப்பதற்கு உள்ள நன்மைகள் அல்லது சேவைப் புறக்கணிப்பு அல்லது அவ்வாறு செயற்படுவதாக அச்சுறுத்தல் விடுப்பது முறைகேடான செல்வாக்காகும்.

## இலஞ்சம் (கையூட்டு) வழங்கல்

■ வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமல் இருப்பதற்காக வாக்காளர் ஒருவரைத் தூண்டும் பொருட்டு வழங்கப்படும் ஒரு "கொடுப்பனவாகும்" அது மறைமுகமாக வழங்கப்படும் ஒன்றாகவும் இருக்கலாம். வாக்களார் சார்பாக மற்றைய ஒருவருக்கு வழங்கப்படுவதாகவும் இருக்கலாம்.

■ அவ்வாறு வழங்கப்படும் தொகை, கடனாகவோ அல்லது வேறு ஏதேனும் ஒன்றாகவோ இருக்கலாம். அவ்வாறு வழங்குவதற்கு வாக்குறுதி அளிப்பதும், வழங்குவதற்கு முயற்சிப்பதாக வாக்குறுதி அளிப்பதும் இலஞ்சம் வழங்குவதாகும்.

■ வாக்களித்திருப்பதன் காரணமாக அல்லது வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்திருப்பது பற்றிய மேலே சொல்லப்பட்டவாறான ஒரு செயலைப் புரிவதும் குற்றத்திற்குப் போதுமானதாகும்.

■ அவ்வாறு வழங்கப்படுபவை, வழங்க வாக்குறுதி அளிக்கப்படுபவை ஒரு பதவி, நியமனம், தொழிலாக அமையலாம். வாக்களித்ததன் காரணமாக அல்லது வாக்களிக்காமை காரணமாக அவ்வாறு புரிவதும் ஓர் இலஞ்சம் சார்ந்த குற்றமாகும்.

■ அவ்வாறு வழங்கப்படுபவை (நேரடியாகவோ மறைமுகமாகவோ) ஒரு பரிசாக, கடனாக, ஆலோசனையாக, வாக்குறுதி அளிப்பதாக, ஒப்பந்தமொன்றின் மூலமாகவும் தவறு இழைக்கப்படலாம். அதன்படி, வாக்களிப்பதும், வாக்களிப்பதாக வாக்குறுதி அளிப்பதும் தவறாகும்.

## அவற்றைப் பெற்றுக்கொள்ளும் வேட்பாளரும் தவறிழைத்தவராவார்

தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் நடைபெறும் வேளையில் அவ்வாறு யாதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவது, அதற்காக இணங்குவது, உடன்பாட்டுக்கு வருவது ஆகியவற்றின் மூலம் வேட்பாளரும் இலஞ்சம் பெறும் குற்றத்தை இழைக்கின்றார்.

மேலே விபரிக்கப்பட்டவாறு இலஞ்சத்தை தாமாகவோ பிறிதொருவர் மூலமாகவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ வேண்டி நிபவரும் இலஞ்சம் பெறும் குற்றத்திற்கு ஆளாவார். மேலே குறிப்பிட்டவாறு இலஞ்சம் வழங்க அல்ல வழங்குவதற்கு முயற்சிப்பதாக வாக்குறுதி அளிக்கும் நபரும் இலஞ்சம் வழங்கும் குற்றத்தை இழைக்கின்றார்.

## ஊழல் நடவடிக்கைகளுடன் தொடர்பான தண்டனைகள்

ஆள் மாறாட்டம், கள்ள வாக்கு அளிப்பதற்கு உடந்தையாக இருத்தல், உபசரணை மேற்கொள்ளல், முறைகேடான செல்வாக்கைப் பிரயோகித்தல், இலஞ்சம் வழங்கல், நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல், வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதில் இருந்து கேட்டு விலகி விட்டதாகப் பொய்யுரைத்தல், தேர்தல் ஊழல் நடவடிக்கைகள் தொடர்பில் தண்டிக்கப்படக் காரணமாக அமையலாம்.

கள்ள வாக்குப் போடுவோருக்கான தண்டனை : ரூ. 500 தண்டப் பணம்

அல்லது 12 மாத கால கடூழியச் சிறைத் தண்டனையாகும். மற்றைய தவறுகளுக்கு ரூ. 500 அல்லது 6 மாத கால சிறைத் தண்டனை அன்றேல் அந்த இரண்டும் விதிக்கலாம்.

■ இது தொடர்பான வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்திலேயே இடம்பெறும்.

■ வழக்குத் தொடர சட்ட மா அதிபரின் அங்கீகாரம் அவசியமாகும்.

■ குற்றவாளியெனக் கண்டால் மற்றைய தண்டனைகளுக்குப் புறம்பாக 4 ஆண்டு காலம் பிரசாவுரிமையும் நீக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராயின், அந்தப் பதவியும் வறிதாகும்.

## சட்டவிரோதச் செயல்கள்

தேர்தல் ஒன்றின்போது மேற்கொள்ளப்படும் சில கொடுப்பனவுகள் அல்லது செலவினங்கள் சட்ட விரோதச் செயலாகக் கருதப்படும்.

■ வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து அல்லது வாக்களிப்பு இடத்திற்கு வாக்காளர்களை எடுத்துச் செல்வதற்காக எந்த ஒரு விதத்திலும் பிரயாணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் அல்லது அதனை வழங்க உடன்படல் ஒரு சட்ட விரோதமான செயலாகும்.

■ பிரசுரங்கள், விளம்பரங்கள் முதலியவற்றைக் காட்சிப்படுத்த அல்லது காட்சிப்படுத்து வதற்காக ஓர் இடத்தைப் பயன்படுத்துவதற்காக வாக்காளர் ஒருவருக்குக் கொடுப்பனவு ஒன்றை மேற்கொள்வதும், அவ்வாறு வழங்க உடன்படுவதும் சட்ட விரோதமானதாகும்.

■ தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தலின் பின்னர் அல்லது அதனிடையே கொடுப்பனவொன்றை வழங்கல் அல்லது வழங்க உடன்படல், கொடுப்பனவொன்றைப் பெறுவதும் உடன்படிக்கைக்கான தரப்பினராவதும் குற்றமாகும்.

■ வாக்கெடுப்புக்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பிலிருந்து. வாக்கெடுப்பு முடிவடைந்து ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் வரையான

இடைப்பட்ட காலத்துள் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அல்லது அந்த இடத்திலிருந்து வாக்காளர்களைக் கொண்டு செல்வதற்காக உதவியும் உடந்தையும் அளிக்கப்படல் ஆகாது. சட்ட ரீதியான ஒரு நடவடிக்கையை அல்லது ஓர் உத்தியோகபூர்வ நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

■ மேற்போந்த செயல்கள் சட்ட விரோதமானதாக அமையாத சந்தர்ப்பங்கள் வருமாறு:

■ யாதேனும் ஒரு வாக்காளர் தனது தொழில் முயற்சி என்ற அடிப்படையில் கட்டணம் அறவிட்டு பத்திரங்களையும், விளம்பர அறிவித்தல்களையும் அச்சிடுவது சட்ட விரோதமானதன்று.

■ ஓர் ஆற்றை அல்லது கடலைக் கடந்து செல்லாமல் வாக்களிக்க முடியாதுள்ள ஒரு சூழ்நிலையில் வாக்காளர்கள் ஆற்றை அல்லது கடலைக் கடந்து செல்ல வாய்ப்பளிக்கலாம்.

■ பொதுப் போக்குவரத்துச் சேவையின் மூலம் தமது சொந்தச் செலவில் வாக்குச் சாவடிக்குச் செல்வதும், வருவதும் சட்ட விரோதமான செயலன்று.

■ வாக்கெடுப்புத் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட எழுத்து மூல அனுமதியுடன் வலது குறைந்த ஒருவர், வாக்குச் சாவடிக்குச் செல்வதற்கும், சென்று வருவதற்கும் போக்குவரத்து வசதி ஒன்றை ஏற்பாடு செய்துகொள்ளலாம். (வாக்காளர் ஒருவர் சார்பாக வேட்பாளர் ஒருவரால் அத்தகைய எழுத்து மூல அனுமதி கோரப்படல் ஆகாது.

■ சட்ட விரோதமான முறையில் ஆட்களைக் கொண்டு செல்லும் போது, தமது வழிநடாத்தலினால் அல்லது சார்த்துதலின் பேரில் பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு அந்த வாகனத்தைக் கைது செய்து வாக்கெடுப்பு முடிவடையும் வரையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருக்கலாம்.

■ சட்டவிரோதமான ஒரு செயல் தொடர்பில் குற்றவாளி எனக் கண்டால், குறித்த செயலுக்காகப் பயன்படுத்திய வாகனத்தை அரசுடைமை ஆக்குவதற்கு மேல் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உள்ளது.

## பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளல்

யாதேனும் ஒரு செய்தித்தாள், சஞ்சிகை, பத்திரிகை அல்லது வெளியீட்டின் மூலம் பொய்யான ஒரு செய்தியைப் புனைந்து வெளியிடுவது இதன் பொருளாகும்.

அத்தகைய பொய்ப் பிரசாரம், குறித்த தேர்தலின்போது போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியின், ஒரு சுயேட்சைக் குழுவின் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் உரை அல்லது நடவடிக்கைகள் தொடர்பானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய பொய்ப் பிரசாரம் தேர்தல் பெறுபேற்றின் மீது தாக்கமொன்றை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒரு பிரசாரத்தை மேற்கொள்ளும் பிரசுரத்தின் உரிமையாளர், முகாமையாளர், ஆசிரியர், வெளியீட்டாளர் அல்லது எழுத்தாளர் ஆகியோர் அந்தச் செயல் தொடர்பில் பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவராவார்.

ஒவ்வொரு தனிநபரும் அதற்காக பொறுப்புக்கூற வேண்டியதில்லை என, தேவையான விடயங்களை நிருபிப்பதன் பேரில் அந்தப் பொறுப்பிலிருந்து விடுபடலாம்.

## கொடுப்பனவொன்றை வழங்குவதன் பேரில் தேர்தல் வேலைகளுக்காகக் கையாளல்

ஒரு வேட்பாளர் தம் சார்பாக தேர்தல் வேளையில் அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆட்களை வேலைகளுக்காக, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான ஊழியர்களை அமர்த்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வாக்குச் சாவடி முகவர்கள், வாக்குகளை எண்ணும் முகவர்கள். எழுதுநர்கள், தூது ஏவலாளிகள் ஆகியோரை அவ்வாறு பணிக்கு அமர்த்திக்கொள்ளலாம்.

நியாயமான எண்ணிக்கையை விஞ்சி அத்தகையவர்களைப் பணிக்கு அமர்த்துவது சட்ட விரோத செயல் எனக் கருதப்படுகின்றது.

## பிரசுரங்களில் பெயர் குறிப்பிடுதல்

ஒரு தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டு வெளியிடப்படும் பிரசார விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், காட்சிப் பொருள்கள் அல்லது விளம்பரங்களில் அவற்றை அச்சிட்டவரின் அல்லது வெளியீட்டாளரின் பெயர், முகவரி குறித்துரைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

அவ்வாறு அன்றி, அத்தகைய வெளியீடுகளை ஒட்டுமாறு அல்லது அச்சிடுமாறு வற்புறுத்தல், பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யும் வேட்பாளர் ஒருவர் அல்லது அவரின் முகவர் ஒருவர் சட்ட விரோத செயலைப் புரிந்து குற்றத்திற்கு ஆளாவார்.

## சட்டவிரோத செயல்களுக்கான தண்டனை

மேல்நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டால் ரூ. 300 தண்டப் பணம் அறவிடப்படும். அது முதற்கொண்டு பிரசார உரிமையும் வறிதாகும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பின், அந்தப் பதவியும் வறிதாகும். சட்ட விரோத செயல்கள் தொடர்பில் வழக்குத் தொடர்வதற்கு சட்ட மா அதிபரின் அங்கீகாரம் பெறப்படுவது அவசியமாகும்.

## சனாதிபதித் தேர்தல் மனுக்கள்

சனாதிபதித் தேர்தலின்போது யாதேனும் ஒரு தேர்தல் மோசடிச் செயல் அல்லது ஒரு சட்டவிரோத செயல் தொடர்பில் குற்றவாளி ஆவதன் காரணமாக, சனாதிபதியாக நியமிக்கப்படுவதை இரத்துச் செய்யலாம்.

■ தேர்தல் மனுவொன்றின் மூலம் தேர்தலொன்றை இரத்துச் செய்வதற்கான காரணங்கள்: சாதாரண இலஞ்சம், உபசரணை மேற்கொள்ளல், சாதாரண அச்சுறுத்தல் அல்லது வேறு ஏதேனுமொரு பிறழ் நடத்தை, வாக்காளர்கள் வாக்களிப்பதில் இருந்து தடுக்கும் செயல்கள் அல்லது தேர்தல் பெறுபேற்றின் மீது செல்வாக்கைப் பிரயோகித்தல்.

■ இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, தேர்தல் நடாத்தப்படாமை.

■ வேட்பாளரினால் அல்லது நன்கு அறிந்திருக்கத்தக்கதாக ஊழல் அல்லது சட்ட விரோத செயல்களைப் புரிதல்.

■ தேர்தல் மோசடிச் செயல் ஒன்றுக்காக குற்றவாளியாகும் ஆளொருவரின் சேவையைத் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளல்.

■ தேர்தல் நடவடிக்கைகளில், பாராளுமன்ற நடைமுறையின் மூலம் குடியுரிமை உரிமை பறிக்கப்பட்ட ஒருவரின் சேவையைப் பெறல்.

■ தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராவதற்குத் தகைமை அற்ற ஒருவராக இருத்தல்.

(இது தொடர்பான ஒரு நீண்ட செயன்முறை குறித்து சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது)

சனாதிபதித் தேர்தல் தொடர்பாக முன்வைக்கப்படும் தேர்தல் மனுக்களை உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்த வேண்டும்.

## வாக்களிப்பதற்கு லீவு பெற்றுக்கொள்ளல்

வாக்களிக்கச் செல்வதற்காக வாக்குரிமையுள்ள ஓர் ஊழியர் எழுத்துமூலம் வேண்டுகோள் விடுக்குமிடத்து, அதற்காக 04 மணி நேரத்திற்குள் குறையாத தொடரான காலத்திற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குவதற்கு ஒவ்வொரு தொழில் தருநரும் கடப்பாடுடையவர் ஆவார்.
அவ்வாறு லீவு வழங்காமல் இருப்பது ஒரு குற்றமாகும். நீதவான் நீதிமன்றம் ஒன்றினால் ரூ. 500 தண்டப் பணம் அல்லது ஒரு மாத கால சிறைத் தண்டனை அல்லது அவை இரண்டும் விதிக்கப்படலாம்.

ப.ஃ.வ்ரல்

இல.16, பேர்ட் பிலேஸ், பாமன்கட வீதி,
கொழும்பு 06.

(+94) 11 2 558 570 /1 - 011 2 558 574

(+94) 11 2 558 572

paffrel@sltnet.lk

www.paffrel.lk